1990 சனவரி 22]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பள்ளி செல்லக் கூடிய மாணவ மாணவிகளுக்கு இலவசமாக பாஸ் வழங்கப்படுகிற கேள்வி சம்பந்தமாக ஏற்கனவே அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் 4, 5 தினங்களாக காலையிலே பள்ளிக்குச் செல்லக்கூடிய நேரங்களில் குழந்தைகளோடு சேர்ந்து அந்த பஸ்ஸிலே வரக்கூடிய நேரத்தில் மிகப்பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அந்தக் குழந்தைகளையெல்லாம் அப்படியே நெருக்கி அவர்களுக்கு மூச்சே திணறக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே தனியாக குழந்தைகள் செல்வதற்கு என்று அந்த நேரத்தில் விசேஷமான, அதிகமான பஸ்களையாவது விட்டு அவர்களுக்கு இந்த இடைஞ்சலிலிருந்து பாதுகாப்பு தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது பள்ளி மாணவர்கள் செல்லக்கூடிய சில வழித்தடங்களில் குழந்தைகளுக்கு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. இருந்தாலும் கூட தேவைக்கு ஏற்ற அளவில் நம்மாலே விடமுடியவில்லை. எனவேதான் ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னாலே நான் பதில் சொல்லும்போது பள்ளிக்கூட நேரம், அலுவலக நேரம், தொழிற்சாலைகளுடைய நேரம் போன்றவற்றை இந்தியாவினுடைய மற்ற நகரங்களில் மாற்றியமைத்து இருப்பதைப் போல சென்னை நகரத்திலும் மாற்றியமைத்தால் வசதியாக இருக்கும் என்ற அந்த எண்ணத்தை அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டுதல்

*2176—திரு. டி. கே. பழனிச்சாமி—மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரியத்திற்கு பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. டி. கே. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மாதவரம் நகரியத்திற்கு பஸ் நிலையம் கட்ட வேண்டுமென்று மாதவரம் நகரிய குழுவிலே தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர்

அவர்களும் அந்த இடத்தை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக அதற்குண்டான நடவடிக்கை எடுத்து பஸ் நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிலையத்தினுடைய அவசியத்தை அறிந்து கொண்ட காரணத்தினாலே தான் 3—7—1989 தேதி அன்று அரசு அதிகாரிகளுடன் நேரடியாக அந்த இடம் பார்வையிடப்பட்டது. அதற்குப் பின்னாலே சுமார் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்ஜிதம் சம்பந்தமாக மாதவரம் பேரூராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவடைந்ததற்குப் பிறகு பேருந்து நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; தலைவர் அவர்களே, நன்றி. வணக்கம்.

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே விலை நிர்ணயம் செய்வதில்.....(மணியடிக்கப்பெற்றது).

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள்

*2189—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டே. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் மொத்தம் 39 திருக்கோயில்கள் உள்ளன.

9.55 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பெரும் பகுதியாக இருக்கின்ற கோயில்கள் இன்றைக்கு பாழடைந்து இருக்கின்றன. உதாரணமாக